உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், நான்கு படகுகள் எடுத்துச் சென்று அதிகமான அளவு மீன்களைப் பிடித்து சேர்த்து வையுங்கள்.

வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

176—

தரம் உயர்த்துதல்

*__3998__—**திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதி, சர்மா நகரிலுள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரம்பூர் தொகுதி, சர்மா நகரிலுள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். கருத்துரு எதுவுமில்லை. தற்போது வாய்ப்புமில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏறக்குறைய 15 மாண்புமிகு உறுப்பினர்கள் கையை உயர்த்தி துணைக் கேள்வி கேட்க அனுமதி கோரியுள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் வாய்ப்புத் தர

2012 ஏப்ரல் 26]

வேண்டுமென்று மிகுந்த ஆர்வம் எனக்குண்டு. ஆகவே, நீங்கள் அனைவரும் சுருக்கமாகப் பேசி ஒத்துழைப்பு கொடுத்தால், அனைவருக்கும் முடிந்த அளவு வாய்ப்புத் தர வசதியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதியில், சர்மா நகர் என்பது மக்கள் மிக அடர்த்தியாக, நெருக்கமாக வாழக்கூடிய ஒரு பகுதி. அங்கிருந்து பெண்கள் மூன்று, நான்கு கிலோ மீட்டர் தொலைவில், கடுமையான போக்குவரத்து நெரிசலுக்கு மத்தியில், வேறு பல பிரச்சினைகளுக்கு மத்தியில், அவர்கள் மாதவரம் நெடுஞ்சாலைக்குச் சென்றுதான் படிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றி, பெண்கள் பள்ளியாக மாற்றினால்தான் அந்தப் பகுதியில் பெண்களின் சேர்க்கையே கூட அதிகரிக்கும், இடை நிற்பதும் நிற்கும். ஆகவே, இதனுடைய அவசிய, அவசரத் தன்மையை உணர்ந்து எப்படியாவது இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று சொன்னால் அரசு சில முக்கிய நெறிமுறைகளை வகுத்திருக்கிறது. அதன் அடிப்படையில் எல்லா நெறிமுறைகளும் பூர்த்தியாகி இருந்தால் அரசு முன்னுரிமை அடிப்படையில் பரிசீலித்து, அவர்களுடைய கோரிக்கையை ஏற்று நடவடிக்கை எடுக்கும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கின்ற பகுதியில், அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பொது மக்கள் பங்குத் தொகையான 2 இலட்சம் ரூபாயை இதுவரை அந்தப் பள்ளியின் சார்பாகக் கட்டவில்லை. மாநகராட்சி கல்வி அதிகாரிகளிடமிருந்து எந்தவித கருத்துருவும் இதுவரை அரசுக்கு வரவில்லை. 8 கிலோ மீட்டருக்கு இடையில் எந்த மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கக்கூடாது. அப்படிப் பார்க்கின்றபோது மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற பள்ளியின் அருகிலேயே 2 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே, இந்த ஆண்டில் வாய்ப்பு இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2012 *ஏப்ரல்* 26

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 கிலோ மீட்டர் என்கிற அந்த நிபந்தனையெல்லாம் கிராமங்களுக்குப் பொருந்தும், வேறு இடங்களுக்குப் பொருந்தும்; நகரத்திற்கு நிச்சயமாகப் பொருந்தாது. ஆகவே, இதுபோன்ற நிபந்தனைகளைத் தளர்த்தி, அந்தப் பகுதியிலே இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் மீண்டும் வலியுறுத்தி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசு அறிவித்திருக்கின்ற நெறிமுறைகள். இதையெல்லாம் தளர்த்த வேண்டுமென்று சொன்னால்—மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய பகுதியிலே அதிகமான அளவில் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று பல தடவை கேட்டிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கின்றபோது அரசுக்கு நிறைய சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே, எதிர்காலத்திலே மக்கள்தொகை அடிப்படையிலே—மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்; மாநகராட்சிப் பகுதியிலே மக்களெல்லாம் அதிகமாக இருக்கிறார்கள் என்ற கருத்தையெல்லாம் தெரிவித்திருக்கின்றார்கள். இதன் அடிப்படையிலே இதை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்திலே என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்த்து, அந்த அடிப்படையிலே அப்படி வாய்ப்பு இருந்தால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கருத்தில்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

2012 ஏப்ரல் 26]

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது நாங்குநேரி தொகுதியிலே, முனஞ்சிபட்டி அரசு உதவி பெறும் குருசங்க உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும். அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, 2 இலட்சம் ரூபாய் பணம் கட்டப்பட்டுவிட்டது. மேலும், அரசு என்ன சட்டதிட்டங்கள் விதித்திருக்கிறதோ அவற்றுக்கெல்லாம் உட்பட்டு கட்டப்பட்டிருக்கிறது. எனவே, இதை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதை அமைச்சர் அறிவாரா? இதனை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட முன்வருவாரா என்று தங்கள் மூலமாக நான் கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கையை உயர்த்துகின்றபோதே நான் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பல நிறைய கோரிக்கைகளை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அனைவருமே, அவர்களுடைய தொகுதியில் குறைந்தது 2—லிருந்து 5 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லா நெறிமுறைகளும் பூர்த்தி செய்யப்பட்டு அரசுக்கு வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி வந்திருந்தால், வருகின்ற ஆண்டில் அனைத்து நெறிமுறைகளையும் பூர்த்தி செய்திருந்தால் முன்னுரிமை அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புதுக்கோட்டை உளூர் என்ற கிராமத்தில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு அரசினுடைய

சட்டதிட்டங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாக அந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, அதை ஆய்வுக்கு உட்படுத்தி, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டிருந்தால், அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் முன்னரே குறிப்பிட்டிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இதே கேள்வியைத்தான் கேட்க இருக்கிறார்கள். ஆகவே, அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் இதையே பதிலாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முதலிலே கேட்டு, அனைத்து கருத்துருக்களும் அரசுக்கு வந்திருந்தால் வருகின்ற கல்வியாண்டில் முன்னுரிமை அடிப்படையிலே மாண்புமிகு அம்மாவின் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 177, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

177—

தொழிற்பயிற்சி நிலையம்

***5204—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?